
**நவம்பர் – 07**

# TNPSC துளிகள்

❖ இந்திய இராணுவம் மற்றும் அமெரிக்க இராணுவம் ஆகியவை இணைந்து உத்தர காண்டில் 'யுத் அபியாஸ்' என்ற மலை உயர்பகுதி இராணுவப் பயிற்சியை மேற் கொண்டன.

# தேசியச் செய்திகள்

## இருவிரல் சோதனைக்குத் தடை




❖ கற்பழிப்புக்கு ஆளானவர்களிடம் 'இருவிரல் சோதனை' மேற்கொள்பவர்கள், தவறான நடத்தை என்ற குற்றத்திற்குத் தண்டிக்கப்படுவர் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.


❖ பாலியல் உறவில் அதிகம் ஈடுபடும் பெண்களைப் பாலியல் பலாத்காரம் செய்ய முடியாது என்று கருதும் ஆணாதிக்க மனநிலையின் அடிப்படையில் இந்த சோதனை என்பது நடத்தப்பட்டு வந்தது.

❖ 2013 ஆம் ஆண்டு மே மாதத்தில், பாலியல் பலாத்காரத்தினால் பாதிக்கப்பட்டவர்களின்

தனியுரிமையை மீறுவதாகக் கூறி இரு விரல் சோதனைக்கு உச்ச நீதிமன்றம் தடை விதித்தது.

## கால்நடைகள் மீது அசெக்ளோஃபெனாக் மருந்தினைப் பயன்படுத்தத் தடை

- இந்தியக் கால்நடை ஆராய்ச்சி நிறுவனம் (IVRI) ஆனது எருமைகளுக்கு ஊசி மூலம் செலுத்தப்படும் அசெக்ளோஃபெனாக் உடலினுள் செலுத்தப்பட்ட பின்பு டைக்ளோஃபெனாக் ஆக மாறுகிறது என்பதைக் கண்டறிந்துள்ளது.
- மேலும், வீட்டு வளர்ப்புக் கால்நடைகளிலும் இதே போன்ற மாற்றங்கள் காணப் படுகின்றன.
- எனவே, இந்தியக் கால்நடை ஆராய்ச்சி நிறுவனமானது கால்நடை மீது அசெக்ளோஃபெனாக் மருந்தினைப் பயன்படுத்துவதைத் தடை செய்யக் கோரியது.
- அசெக்லோஃபெனாக் மருந்து உட்செலுத்தப்பட்ட அடுத்த 20 நிமிடங்களுக்குள் டிக்ளோஃபெனாக் உருவாவது கண்டுபிடிக்கப்பட்டது.
- 4 முதல் 8 மணி நேரத்திற்குள் டிக்ளோஃபெனாக்கின் செறிவு உச்சத்தை அடைந்தது.
- உயிர் வாழ்வதற்காக இந்த கால்நடைகளின் சடலங்களை உண்ணும் கழுகுகளை இது பாதிக்கிறது.
- அசெக்லோஃபெனாக் என்பது கால்நடைகள் மற்றும் நாய்களுக்கு சிகிச்சையளிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு கால்நடைகளுக்கான வலி நிவாரணி ஆகும்.
- 2020-2025 ஆம் ஆண்டு கழுகுப் பாதுகாப்புச் செயல் திட்டமானது அசெக்ளோஃபெனாக் நச்சுத் தன்மை வாய்ந்ததாக கூறுகிறது.




## மங்கர் தாம் - தேசிய நினைவுச் சின்னம்

- ராஜஸ்தானின் பன்ஸ்வாரா மாவட்டத்தில் உள்ள மங்கர்தாம் மலையினைத் தேசிய

நினைவுச் சின்னமாகப் பிரதமர் அவர்கள் அறிவித்தார்.

- பில் சமூகத்தினர் மற்றும் ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் மற்றும் குஜராத்தின் பிற பழங்குடியினருக்கு மங்கர் மலை சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகிறது.
- மங்கர் மலையில் சுதந்திரப் போராட்டத்தின் போது 1.5 லட்சத்துக்கும் அதிகமான பில் மற்றும் பிற பழங்குடியினர் பிரிட்டிஷ் அதிகாரிகளுடன் நீண்ட கால மோதலில் ஈடுபட்டனர்.
- இந்தப் போராட்டத்திற்காக கூடிய கூட்டத்தின் மீது ஆங்கிலேயர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 1500 பழங்குடியினர் வீரமரணம் அடைந்ததால், இது மங்கர் படுகொலை என அழைக்கப் படுகின்றது.



## உள்துறை அமைச்சர்களின் ‘சிந்தன் ஷிவிர்’ நிகழ்வு




- சிந்தன் ஷிவிர் நிகழ்வானது மத்திய உள்துறை அமைச்சர் தலைமையில் ஹரியானா மாநிலத்தில் நடைபெற்றது.
- உள்துறை அமைச்சர்களின் சிந்தன் ஷிவிர் நிகழ்வானது இந்தியாவின் உள்நாட்டுப் பாதுகாப்பு தொடர்பான கொள்கைகளை உருவாக்கச் செய்வதற்கான ஒரு தேசிய அளவிலான தொலைநோக்கத்தினை வழங்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டு இது ஏற்பாடு செய்யப்பட்டது.

- தேசிய மற்றும் மாநில அளவில் பல்வேறுப் பங்குதாரர்களுக்கு இடையே திட்டமிடல் மற்றும் ஒருங்கிணைப்பில் இணை திறனை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கொள்கை 2047 மற்றும் பஞ்ச பிரான் ஆகியவற்றைச் செயல்படுத்துவதற்கான செயல் திட்டத்தை உருவாக்குவதற்காக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

## உலகின் மிகப்பெரிய வேலையளிப்பு நிறுவனம்

- ஸ்டாடிஸ்ட்டா அமைப்பின் ஆய்வின் படி, இந்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சகம் ஆனது உலகின் மிகப்பெரிய வேலையளிப்பு அளிக்கும் (முதலாளித்துவ நிறுவனம்) ஆக உள்ளது.
- இந்த ஆய்வின் படி, இது பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள், சேமப் படை வீரர்கள் மற்றும் ஆதரவுப் பணியாளர்கள் ஆகியோர் உள்ளிட்ட 2.92 மில்லியன் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.
- 2.91 மில்லியன் பேர் பணியாற்றும் அமெரிக்கப் பாதுகாப்புத் துறையானது இதில் இரண்டாவது இடத்தில் உள்ளது.





# சர்வதேசச் செய்திகள்

## வலுக்கட்டாயமாக இடம் பெயர்த்தப்பட்ட மக்கள்

- அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உயர் ஆணையத்தின் அறிக்கையின்படி, பூமியில் வாழும் 77 பேரில் ஒருவர் வலுக்கட்டாயமாக இடம் பெயர்த்தப்பட்டுள்ளனர்.
- துன்புறுத்தல், மோதல்கள், வன்முறை, மனித உரிமை மீறல்கள் மற்றும் பொது ஒழுங்கைக் கடுமையாகச் சீர்குலைக்கும் நிகழ்வுகள் காரணமாக தங்கள் வீடுகளை விட்டு வலுக்கட்டாயமாக இடம் பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டின்

முதல் பாதியில் 103 மில்லியனாக உயர்ந்துள்ளது.

- 2021 ஆம் ஆண்டின் இறுதியில் 25.7 மில்லியனாக இருந்த உலகளாவிய அகதிகள் மற்றும் சர்வதேசப் பாதுகாப்பினை தேடும் மக்களின் எண்ணிக்கை 24 சதவீதம் அதிகரித்து 2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் 32 மில்லியனாக உயர்ந்துள்ளது.
- இந்த ஆண்டு ஜூன் மாத இறுதியில், உலகின் அனைத்து அகதிகளில் பாதிக்கும் மேற் பட்டவர்கள் (56 சதவீதம்) சிரியா, வெனிசுலா அல்லது உக்ரேனிய நாட்டவர்கள் ஆவர்.




# பொருளாதாரச் செய்திகள்

## எண்ணிம வர்த்தகத்திற்கான தடையற்ற வலையமைப்பு





- ஷிப்ரோக்கெட் ஆனது எண்ணிம வர்த்தகத்திற்கான தடையற்ற வலையமைப்பில் இணைக்கப் பட்ட முதல் நகரங்களுக்கு இடையேயான தளவாட வழங்குநர் நிறுவனம் ஆகும்.
- ஷிப்ரோக்கெட், சரக்குப் போக்குவரத்து மற்றும் தளவாடங்கள் சார்ந்த வசதி வழங்குநர், அரசாங்கத்தின் எண்ணிம வர்த்தகத்திற்கான தடையற்ற வலை அமைப்பில் (ONDC) இடம் பெற்றுள்ளது.
- இந்தியா முழுவதும் உள்ள நகரங்கள் மற்றும் சிறு நகரங்களுக்கு, அனைத்துப்

பிரிவுகளைச் சேர்ந்த விற்பனையாளர்கள் பொருட்களை அனுப்ப இது உதவுகிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## டிஎன்ஏவில் வைரஸ்





- நமது மரபணுக்களில் பதிக்கப்பட்ட வைரஸ் டிஎன்ஏ வரிசைகளின் வடிவத்திலான பழைய வைரஸ் தொற்றுநோய்கள் ஆரோக்கியமான மக்களின் உடலில் இன்னும் செயல்பாட்டு நிலையில் உள்ளன.
- HERVகள், அல்லது மனித அகந்தோற்று ரெட்ரோவைரஸ்கள், மனித மரபணுவில் சுமார் 8% ஆகும்.
- மில்லியன் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு மனித குலத்தின் முதன்மையான மூதாதையர்களைப் பாதித்த தொற்றுநோய்களின் விளைவாக இவை விடுபட்டு மனித உடலில் காணப்படுகின்றன.
- வைரஸ்கள் தங்கள் மரபணுக்களைப் புரோவைரஸ் வடிவில் அவற்றைக் கடத்தும் காரணிகளுள் நுழைக்கின்றன.
- இன்று மனித உடலில் சுமார் 30 வகையான மனித அகந்தோற்று ரெட்ரோவைரஸ்கள் உள்ள நிலையில், மனித மரபணுவில் 60,000க்கும் மேற்பட்ட புரோவைரஸ்கள் உள்ளன.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## இந்தியாவின் 53வது புலிகள் காப்பகம்

- உத்தரப் பிரதேசத்தின் ராணிப்பூர் புலிகள் காப்பகம் இந்தியாவின் 53வது புலிகள் காப்பகமாக மாறியுள்ளது.
- மேலும், இது உத்தரப் பிரதேசத்தில் உள்ள நான்காவது புலிகள் காப்பகமாகும்.

- ராணிப்பூரைத் தவிர, அந்த மாநிலத்தில் துத்வா, பிலிபித் மற்றும் அமங்கர் ஆகிய மூன்று புலிகள் காப்பகங்கள் உள்ளன.
- ஜிம் கார்பெட் தேசியப் பூங்காவின் தாங்கு மண்டலமான அமங்கர் என்ற புலிகள் காப்பகமானது உத்தரப் பிரதேசத்தின் பிஜ்னூரில் அமைந்துள்ளது.
- துத்வா புலிகள் காப்பகம் லக்கிம்பூரிலும், பிலிபித் புலிகள் காப்பகம் பிலிபிட்டிலும் அமைந்துள்ளது.




# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## SKOCH விருது




- மேற்கு வங்காள அரசின் லட்சுமிர் பந்தர் திட்டம் ஆனது மகளிர் மற்றும் குழந்தைகள்

மேம்பாட்டுப் பிரிவில் SKOCH விருதைப் பெற்றுள்ளது.

- இந்த விருதானது, அம்மாநில அரசாங்கத்திற்கும், இந்தத் திட்டத்தின் மூலம் அதிகாரம் பெற்ற அம்மாநிலத்தினைச் சேர்ந்த இரண்டு கோடி பெண்களுக்கும் கிடைத்த அங்கீகாரமாகும்.
- இந்தத் திட்டமானது, 25 முதல் 60 வயதுக்குட்பட்ட குடும்பத் தலைவிக்கு நிதியுதவி வழங்குகிறது.

## கன்னட ராஜ்யோத்சவா விருது



- இந்த ஆண்டு கன்னட ராஜ்யோத்சவா விருது பெற்ற 67 பேரில் இஸ்ரோவின் முன்னாள் தலைவர் K. சிவனும் ஒருவர் ஆவார்.
- சிவன் அவர்கள் 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை இஸ்ரோவின் தலைவராக பணியாற்றினார்.
- K. சிவன் அவர்கள் தலைமையில், இஸ்ரோ நிறுவனம் இந்தியாவிலேயே தயாரிக்கப் பட்ட முதலாவது புவியிடங்காட்டி அமைப்பான NavIC என்ற அமைப்பினை விண்ணில் ஏவியது.
- GSLV Mk II ஏவுகலத்தின் நான்கு வெற்றிகரமான ஏவுதலுக்கும் சிவன் அவர்கள் தலைமை ஏற்றார்.

## நாட்டின் C20 பிரிவின் தலைவர்

- மாதா அமிர்தானந்தமயி தேவி நாட்டின் குடிமை-20 பிரிவின் தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- C20 என்பது 20 நாடுகள் (G20) குழுவின் அதிகாரப் பூர்வ ஈடுபாட்டுக் குழுவாகும்.
- G20 என்பது உலகளாவிய அளவில் உலகின் வளர்ச்சிப் பெற்ற மற்றும் வளர்ந்து வரும் நாடுகளின் நிதி உறுதித் தன்மையை நிவர்த்தி செய்வதற்கான முதன்மையான அரசுகளுக்கிடையேயான மன்றமாகும்.
- C20 என்பது குடிமைச் சமூக அமைப்புகளுக்கு G20 அமைப்பின் தலைவர்களுக்கு அரசு சாராத மற்றும் வணிகம் சாராத ஆதரவுகளை வழங்குவதற்கான தளமாகும்.

- 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 01 ஆம் தேதி முதல் 2023 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் தேதி வரை ஓர் ஆண்டுக் காலத்திற்கு G20 அமைப்பின் தலைமைப் பதவியை இந்தியா ஏற்க உள்ளது.



# விளையாட்டுச் செய்திகள்

## பிரெஞ்ச் ஓபன் போட்டி 2022



- 2022 ஆம் ஆண்டு பிரெஞ்ச் ஓபன் சூப்பர் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் ரங்கிரெட்டி மற்றும் சிராக் ஷெட்டி இணை சாம்பியன் பட்டத்தை வென்றது.
- சாத்விக் மற்றும் சிராக் இணை இந்த ஆண்டு அவர்களின் முதல் சூப்பர் 750 மற்றும் இரண்டாவது BWF உலகப் போட்டிப் பட்டத்தையும் வென்றது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★